Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

காலை- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆனி 13    (27 06 - 1992)    சனிக்கிழமை    ஒளி: 130

## கிராமசேவையாளர் தெரிவு விசேட பரீட்சை நடக்கும்

யாழ். மாவட்டத்தில் கிராமசேவையாளர் தெரிவுக்கான பரீட்சை மறுபடி ஒருதினத்தில் நடத்தப்படவுள்ளதாக தெரிகிறது. கடந்த பதின்மூன்றாம் திகதியன்று நடைபெற்ற கிராமசேவையாளர் பரீட்சை யாழ். மாவட்டத்தில் வினாத்தாள்கள் வராமையால் நடைபெறாததும் ஏனைய மாவட்டங்களில் நடைபெற்றதும் தெரிந்ததே. இதனால் இதற்கென விசேட பரீட்சை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைப்பதாக பரீட்சை ஆணையாளர் தம்மிடம் கூறியதாக தமிழர் ஆசிரியர் சங்க செயலாளர் த. மகாசிவம் கூறியுள்ளார்.

Nallur Branch Library

## (பாராளுமன்றத் தெரிவுக்குழுவின்)

# 'பிரதேச ராஜ்ய சபா' தீர்வுத் திட்டம் சிங்கள பாதுகாப்பு பேரவையால் நிராகரிப்பு

## சிறிலங்கா ஜனாதிபதி மீதும் கண்டனம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கென பாராளுமன்ற தெரிவுக்குழுவால் முன்வைக்கப்பட்ட பிரதேச ராஜ்ய சபை திட்டத்தை தாம் திட்டவட்டமாக நிராகரிப்பதாக சிங்கள பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

எந்த வடிவத்திலும் வடக்கு-கிழக்கு பகுதிகளை இணைத்து முன்வைக்கப்படும் திட்டம் எதனையும் தாம் முற்று முழுதாக நிராகரிப்பதாகவும் அவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இவ்வாறான அமைப்புகள் தமிழரின் தாயகக் கோட்பாட்டிற்கு வலுவூட்டுவதாக அமையும் என்பதால் இவ்வாறான தீர்வுத்திட்டம் எதனையும் தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பின் போது பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் யோசனையை ஏற்று அதனை செயற்படுத்துவேன் எனத் தெரிவித்துள்ளமையும் இச்சிங்களபாதுகாப்பு பேரவை எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு வடக்கு, கிழக்கு இணைப்பிற்கு சாதகமான முடிவு எதையும் எடுக்குமானால் அதை ஜனாதிபதி பிரேமதாசா அரசாங்கம் அமுல்படுத்துவதென்பது ஐ.தே. கட்சியின் தேர்தல்வாக்குறுதியை மீறும் செயல் எனவும் தெரிவித்துள்ளது.

### புரிந்துணர்வுக்குழு அமைக்கும் முயற்சி தோல்வி

தென்தமிழீழத்தில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே புரிந்துணர்வுக் குழுக்களையும் பிரஜைகள் குழுக்களையும் அமைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன. கிறிஸ்தவ மதகுரு மற்றும் பல தமிழ் மக்களும் ஒன்றிணைந்து தமிழ்-முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்டுள்ள விரிசல் நிலையை நீக்கி புரிந்துணர்வுடன் வாழ்வதற்கு வழிவகைகளை ஏற்படுத்த இக் குழுக்களை அமைக்க முயன்றகள் பெரும் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளனர். இம் முயற்சிக்கு பெரும்பாலான முஸ்லிம்கள் ஒத்துழைப்பை வழங்க மறுத்தனர்.

மேலும் இம்முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை அறிந்த சிறிலங்கா இராணுவத்தினர் அம்முயற்சிகளை மேற்கொண்டவர்களை பயமுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதனால் தமிழ் முஸ்லிம் மக்களிடையே நட்புறவை ஏற்படுத்த மேற்கொள்ளப்...

### தமிழ்நாட்டிலிருந்து 2357 வவுனியா குடும்பங்கள் சொந்த இடம் திரும்பின

(வவுனியா)

இந்தியாவிற்கு அகதிகளாக சென்றவர்களில் வன்னிப்பகுதியைச் சேர்ந்த 2357 குடும்பத்தினர் நாடு திரும்பியுள்ளனர். இவர்கள் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களை ... முகாமைவிட்டு வெளியேறி தமது சொந்த இடங்களுக்குச் சென்றுள்ளதாக வவுனியா கச்சேரி சமூக சேவை இலாகா அதிகாரி வெளிவித்துள்ளார்.

### சுதந்திரக் கட்சியுடன் தமிழ்க்குழு பேச்சு

## பதுக்கல் மண்ணெண்ணை மீட்பு காவல்துறை தீவிர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணை பதுக்கும் வியாபாரிகளை தேடிக்கண்டு பிடிக்கும் தீவிர முயற்சியில் தமிழீழக் காவல்துறையினர் தொடர்ந்தும் ஈடுபட்டிருக்கின்றனர்.

பதுக்கல்காரர்கள் பதுக்கி வைத்திருந்த பெருமளவு மண்ணெண்ணை தேடிக் கண்டு பிடிக்கப்பட்டு சந்தைக்கு கொண்டுவரப்பட்டது. இம் மண்ணெண்ணை நியாய விலையில் விநியோகிக்கப்பட்டது. பதுக்கல்க்காரர்களும் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

காவற்துறையினரது நேற்றைய நடவடிக்கையின்போது மாகியப்பிட்டி, மல்லாகம், மருதனாமடம், சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் பெருமளவு மண்ணெண்ணை கைப்பற்றப்பட்டு அகதி முகாம்களுக்கு அண்மையில்வைத்துப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

அதேவேளை யாழ் நகரப் பகுதியிலும் ... யிலும் ஈடுபட்டிருந்தனர் இவ்வாறான நடவடிக்கைகள் இன்றும் தொடர்ந்து மேற்கொள்ளப்படவிருக்கிறது என்று தமிழீழக் காவற்துறையினர் அறிவித்துள்ளனர்.



சுன்னாகத்தில் நேற்று முன்தினம் தமிழீழ காவல்துறையினரால் கைப்பற்றப்பட்ட மண்...

எந்த வடிவத்திலும் வடக்கு-கிழக்கு பகுதிகளை இணைத்து முன்வைக்கப்படும் திட்டம் எதனையும் சாம் முற்று முழுதாக நிராகரிப்பதாகவும் அவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

... தமிழரின் தாயகக் கோட்பாட்டிற்கு வலுவூட்டுவதாக அமையும் என்பதால் இவ்வாறான தீர்வுத்திட்டம் எதனையும் தாம் ஏற்றுக்கொள்ளப் போவ...

...படுகிறது.

இதேவேளை தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பின் போது பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் யோசனையை ஏற்று அதனை செயற்படுத்துவேன் எனத் தெரிவித்துள்ளமையும் இச்சிங்களபாதுகாப்பு பேரவை எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

...சாதகமான முடிவு எதையும் எடுக்குமானால் அதை ஜனாதிபதி பிரேமதாசா அரசாங்கம் அமுல்படுத்துவதென்பது ஐ.தே. கட்சியின் தேர்தல் வாக்குறுதியை மீறும் செயல் எனவும் தெரிவித்துள்ளது.

...தொடர்ந்தும் ஈடுபட்டிருக்கின்றனர்.

பதுக்கல்காரர்கள் பதுக்கி வைத்திருந்த பெருமளவு மண்ணெண்ணை தேடிக் கண்டு பிடிக்கப்பட்டு சந்தைக்கு கொண்டுவரப்பட்டது. இம் மண்ணெண்ணை நியாய விலையில் விநியோகிக்கப்பட்டது. பதுக்கல்க்காரர்களும் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

காவற்துறையினரது நேற்றைய நடவடிக்கையின்போது மாதியப்பிட்டி, மல்லாகம், மருதனாமடம், சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் பெருமளவு மண்ணெண்ணை கைப்பற்றப்பட்டு அகதிமுகாம்களுக்கு அண்மையில்வைத்துப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

அதேவேளை யாழ் நகரப் பகுதிகளிலும், கிராமப்பகுதிகளிலும் காவற்துறையினர் மண்ணெண்ணை கடத்துபவர்களைக் கண்டுபிடிக்கும் பணி...



சுன்னாகத்தில் நேற்று முன்தினம் தமிழீழ காவல்துறையினரால் கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணெய் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் காட்சி.

## புரிந்துணர்வுக்குழு அமைக்கும் முயற்சிதோல்வி

தென்தமிழீழத்தில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே புரிந்துணர்வுக் குழுக்களையும் பிரஜைகள் குழுக்களையும் அமைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன. கிறிஸ்தவ மதகுருமாரும் பல தமிழ் மக்களும் ஒன்றிணைந்து தமிழ்-முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்டுள்ள விரிசல் நிலையை நீக்கி புரிந்துணர்வுடன் வாழ்வதற்கு வழிவகைகளை ஏற்படுத்த இக் குழுக்களை அமைக்க முயன்றனர்.

இதற்கு அரசாங்க அதிகாரிகள் பெரும் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளனர். இம் முயற்சிக்கு பெரும்பாலான முஸ்லிம்கள் ஒத்துழைப்பை வழங்க மறுத்தனர்.

மேலும் இம்முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை அறிந்த சிறிலங்கா இராணுவத்தினர் அம் முயற்சிகளை மேற்கொண்டவர்களை பயமுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதனால் தமிழ் முஸ்லிம் மக்களிடையே நட்புறவை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவும் கைவிடப்பட்டன.

சிறிலங்காவின் பல பகுதிகளில்

## கொள்ளைகள் அதிகரிப்பு; இராணுவத்தினர் தொடர்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் பலபகுதிகளிலும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துவருவதாகவும், விழிப்பாக இருக்குமாறு பொலிசாருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. இவற்றில் இராணுவத்தினரும்சம்பந்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொச்சிக்கடையில் ஒரு கொள்ளைச்சம்பவம் முறியடிக்கப்பட்டபோது இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் உட்பட நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதுபற்றி பொலிஸ்மா அதிபர் ஏனர்ஸ்ட் பெரேரா மேலும் கூறுகையில், கடந்த மூன்று மாதங்களாக நாட்டில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும், இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளைப் பொலிசார் மேற்கொள்ளவேண்டுமெனவும்கேட்டுக்கொண்டார்.

அத்துடன் பெரும்பாலான கொள்ளைச் சம்பவங்களில் நவீன ஆயுதங்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாயுதங்களைப் பயன்படுத்தி வீட்டாரைப்பயமுறுத்திக் கொள்ளைகள் நடாத்தப்படுகின்றன. எனவே மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர்கள் இதுவிடயத்தில் மிக விழிப்பாக இருந்து செயற்படவேண்டுமென அவர் தமது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில்

## யுத்த நடவடிக்கைகளால் 6.000 பெண்கள் விதவையாகினர்

(கொழும்பு)

யுத்த நடவடிக்கைகளினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் ஆறாயிரம் பெண்கள் விதவைகளாகியுள்ளனர் என்றும், அவர்களின் புனர்வாழ்விற்காக முடிந்தளவு உதவிகள் செய்யப்படுவதாகவும், தென்னிந்திய திருச்சபையின் செய்திக் குறிப்பொன்றில் கூறப்பட்டுள்ளது.

## கொழும்பு துறைமுகத்தில் கப்பல் தீப்பிடித்தது

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் நேற்று நிறுத்தப்பட்டிருந்த ஹொங்கொங் கப்பலொன்று தீப்பிடித்து எரிந்தது. இதனால் கொள்கலன்கள் எரிந்து நாசமாகியது தீ அணைப்பு படையினர் விரைந்து செயற்பட்டு சில மணி நேரத்தில் தீயைக் கட்டுப்படுத்தியதாக தெரிய வருகிறது.

தமிழ்நாட்டிலிருந்து

## 2357 வவுனியா குடும்பங்கள் சொந்த இடம் திரும்பின

(வவுனியா)

இந்தியாவிற்கு அகதிகளாக சென்றவர்களில் வன்னிப்பகுதியைச் சேர்ந்த 2357 குடும்பத்தினர் நாடு திரும்பியுள்ளனர். இவர்கள் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களில் 524 குடும்பத்தினர் மட்டுமே தமது சொந்த இடங்களுக்கு செல்லமுடியாது வவுனியா அகதிமுகாம்களில் உள்ளனர் ஏனையோர் அகதி முகாமைவிட்டு வெளியேறி தமது சொந்த இடங்களுக்குச் சென்றுள்ளதாக வவுனியா கச்சேரி சமூக சேவை இலாகா அதிகாரி வெளிவித்துள்ளார்.

## சுதந்திரக் கட்சியுடன் தமிழ்க்குழு பேச்சு

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சமசமஜாக் கட்சி ஆகியவற்...

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அமுல்

யாழ் மாவட்டத்தில் தீவுப் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் நேற்றுக் காலை 6.00 மணி முதல் மறுஅறிவித்தல் வரை ஊரடங்கு அமுல்செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா கூட்டுப் படை தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது.

# பரந்தன்- இயக்கச்சி பகுதியில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சிறிலங்கா விமானப்படையினர் குண்டுத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

உமையாள்புரம் குமரபுரம், மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் இயக்கச்சிப்பகுதியிலும் இக்குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டிருக்கின்றன.

காலை8.30 மணியளவில் மேற்படி பகுதிக்கு விரைந்துவந்த சிறிலங்கா விமானப்படையின் மூன்று குண்டுவீச்சு விமானங்கள் பல தடவைகள் வட்டமிட்டன. தொடர்ந்து இப் பகுதிகள்மீது பல தடவைகள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்தின. இத்தாக்குதலினால் உமையாள்புரம் பகுதியில் உள்ள பல வீடுகள் சேதமடைந்தன.

இயக்கச்சிப்பகுதியில்காலை 9-00 மணியளவில் இரு குண்டுவீச்சு விமானங்கள் பல தடவை குண்டுத்தாக்குதல்களை நடாத்தின இத்தாக்குதல்களினால் இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து சென்றனர்

அதேவேளை நேற்று இரவு 8.30 மணியளவில் வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டுப் பகுதியிலிருந்து ஆனையிறவுப் பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டிருக்கின்றன.

# பழுகாமம் சுற்றி வளைப்பு; துப்பாக்கிசூட்டிற்குபலர்காயம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு பழுகாமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பெரும் சுற்றி வளைப்பு ஒன்றைமேற்கொண்டனர். இச்சுற்றிவளைப்பின் போது சிறிலங்கா இராணுவத்தினரால்மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் 12 பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இப்பகுதியைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் கண்மூடித் தனமான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதுடன் பொதுமக்கள்பலரையும் கைது செய்து முகாமிற்குக்கொண்டு சென்றனர்.

சுற்றிவளைப்பின் போது எதிர்ப்படும் தமிழர்கள் அனைவரும் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது.

கனடா அரசாங்கம்

## போலிக் குடியேற்றவாசிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

(ரொறன்ரோ)

கனடா அரசாங்கம் போலிக் குடியேற்றக்காரர்களைக் கட்டுப்படுத்தப் புதிய விதிகளை அமுலாக்கவிருப்பதாக தெரிய வருகின்றது. போலிக்குடியேற்றக்காரர்கள், குற்றவாளிகள், நவன்புரிந்திட்டங்களில் மோசடி செய்பவர்கள் ஆகியோரைக் கட்டுப்படுத்துவதற்காகவும், உண்மையானவிண்ணப்பதாரிகளின் குடியேற்ற வழிமுறைகளை இலகுவாக்கவும் கனடிய அரசாங்கம் தனது குடியேற்றக் கொள்கைகளைச் சீர

(4 ஆம் பக்கம் பார்க்க)

தம்பலகாமத்தில்

## தமிழ்க் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவில்லை

[திருக்கோணமலை]

திருக்கோணமலை மாவட்டம் தம்பலகாமம் அகதிமுகாமிலிருந்து 150 தமிழ்க் குடும்பங்கள் பலவந்தமாக சிங்கள முஸ்லிம் மக்களுக்கு மத்தியில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு வேண்டிய எவ்வித உதவிகளும் இதுவரை வழங்கப்படவில்லை. இம் மக்கள் பலர் தமது சொந்த நிலங்களில் பயிர்ச் செய்கையில் ஈடுபடமுயன்றபோது அதனை சிங்களவரும் முஸ்லிம்களும் தடுத்துவிட்டனர்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களின் நலன் கருதி கல்விக் கருத்தரங்கு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது

யாழ் நாவலர்கலாசாரமண்டபத்தில்நடைபெறஇருக்கும் இக் கருத்தரங்கிற்கு அ. நிஸ்லஸ் தலைமை தாங்குகிறார்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வீரச்சாவு



வீரவேங்கை புகழரசன் 23 - 6 - 92 அன்று கட்டைக் காட்டுப் பகுதியில் இராணு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**விற்பனையாகின்றன**

A/L வினாவிடை (உயர்கல்விப் பதிப்பகம் கொழும்புத்துறை) CR கொப்பிகள், 5-ம் ஆண்டு கட்டுரைத் தேன்துளி 60, CHINA கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தகசாலை, யாழ்ப்பாணம். அரஸ் புத்தகநிலையம், யாழ்ப்பாணம் [2708]

**தவறிவிட்டது**

இராசையா என்பவரது மூக்குக் கண்ணாடி நல்லூர் கந்தசாமி கோவில் தண்ணீர்க் குழாய் அருகில் தவற விடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (2723)

**புலமைப் பரிசில்**

அரசாங்கத்தால் 26-4-1992 (ஞாயிறு) நடத்தப்பட்ட பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடன் விற்பனையாகின்றன. பாடசாலைகளுக்கும், தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் விசேட கழிவுண்டு. பரீட்சைப் பகுதி, Bond கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம். (சி/4598)

**புலமைப் பரிசில் பரீட்சை**

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes 58A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/4609)

## புத்தகம் அன்பளிப்பு

[கொழும்புத்துறை]

வடமராகாணம் தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் யாழ் அரசினர் வைத்திய சாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் நூலக சேவைக்காக புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் கடந்த மாதம் 20ம் திகதி புதன்கிழமை நோயாளர் நலன்புரிச்சங்க நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (24)

## செ.பற்றிக்ஸ் அதிபர் ஓய்வுபெறுகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண.

## தெருக்கூத்து

[புங்குடுதீவு]

தற்போதைய இக்கட்டான நிலையைச் சாதகமாக்கி விஷமிகளால்வேண்டுமென்றே பரப்பப்படும் வதந்திகளை மக்கள் நம்பி கலக்கமடையக் கூடாது என்பதையும் நடைபெறும் மண்மீட்புப் போரில் மக்கள் அனைவரும் முழுமையான பங்காளிகளாக இணைந்தால் யாழ். குடாநாட்டிற்குள் மட்டுமல்ல தமிழீழத்தின் எந்த ஒரு பகுதியிலும் சிங்கள இராணுவம் காலடி வைக்கவே முடியாது என்பதையும் விளக்கும் வகையில் விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழக தீவகப் பிரிவினரால் 'திருப்பம்' என்னும் தெருக்கூத்து தற்போது யாழ்குடா நாடெங்கும் பரவலாக நடாத்தப்பட்டு வருகின்றது (22)

மலையக மக்கள் வாக்காளராய் பதிய

# பிரஜா உரிமைச் சான்றிதழ்; அமைச்சர் செல்லச்சாமி ஆட்சேபம்

(கொழும்பு)

வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கு பிரஜாவுரிமைச் சான்றிதழ் சமர்ப்பிக்கும்படி கோரப்படுவதால் இந்திய வம்சாவளியினரான தோட்டத் தொழிலாளர் இடைஞ்சல்பட நேருவதாக இ. தொ. கா. வின் பொதுச் செயலாளர் எம். எஸ் செல்லச்சாமி தேர்தல் ஆணையாளரிடம் புகாரிட்டுள்ளார்.

இதுகுறித்து தேர்தல் ஆணையாளரிடம் புகாரிடும் போது புதிய சட்டத்தின்படி இந்திய வம்சாவளி மக்கள் இலங்கைப் பிரஜைகளே அவர்களிடமிருந்து பிரஜாவுரிமைச் சான்றிதழ் கேட்கத் தேவையில்லை என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதே நேரம் செல்லச்சாமி மலையக மக்களிடமும்வேண்டுகோள் ஒன்றைவிடுத்துள்ளார். மலையக மக்கள் தமது உரிமைகளைப் பெறவேண்டுமானால், வாக்காளர் இடாப்புக்களில் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளவேண்டும் என்றும்,

1988 இல் இருந்து இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் அனைவரும் இந்நாட்டின் பிரஜைகளாகவே கணிக்கப்படுகின்றனர். ஆனால் மலையக மக்கள் இதுவரையில் பூரணமாக தங்களை வாக்காளர் இடாப்பில் பதிந்து கொள்ளவில்லை. என்னும் குறை இருந்தே வருகிறது. வாக்காளராக தங்களைப் பதிந்து கொள்வதின் மூலமே நமது சக்தியை அவர்களுக்கு நாம் காட்ட முடியும்.

இன்னும் எமது பிரச்சினைகள் முழுதாக தீர்ந்துவிடவில்லை. அப்பிரச்சினைகளையும் திருத்திக் கொள்ள நமக்குள்ள ஒரே ஆயுதம் வாக்குரிமைதான். அந்த உரிமையை பயன்படுத்த, முதலில் நாம் நம்மை வாக்காளராக பதிந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை

# நிலையியற்கட்டளைக் கேற்ப வரையப்படவில்லை

**-- ரணில் விக்கிரமசிங்கா**

(கொழும்பு)

'அரசாங்கத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள்கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்ற நிலையியல் கட்டளைக்கு ஏற்ப வரையப்படவில்லை. அப்பிரேரணையை நிலையியற் கட்டளைக்கு ஏற்ப திருத்தியமைத்து புதிய பிரேரணை கொண்டு வந்தால் அதனைப் பாராளுமன்றத்தில் விவாதிக்க ஜூலை மாதத்தின் கடைசிப் பகுதியில் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொள்ளலாம்'.

இவ்வாறு பாராளுமன்ற கட்டடத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்ற நிலையியல் கட்டளைக்கு ஏற்ப வரையப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டது.

ஆளும் கட்சி சார்பில் அமைச்சர்களான ரணில் விக்கிரமசிங்க, வீரசிங்கமல்லிமராய்ச்சி விஜயபால மெண்டிஸ், ஜேசன் அமரதுங்கா ஆகியோரும் எதிரணி சார்பில் ரிச்சர்ட் பத்திரண, லக்ஷ்மன் ஜெயக்கொடி, கே. நவரத்தினம், தினேஷ் குணவர்த்தன, முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அபூபக்கர் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# உப்புடன் அயடின் கலந்து விற்பனைக்கு விடப்படும்

நாட்டின் சனத்தொகையில் சுமார் 70 சத வீதமானோருக்கு தொய்டர் என்ற தொண்டைக் கழலை ஏற்பட்டிருப்பதனால் உற்பத்தி செய்யப்படும் உப்போடு அயடின் கலந்து விற்பனைக்கு விடப்படும் என கனிப்பொருள் சனிவளங்கள் அமைச்சர் எச். பீ. வன்னிநாயக்கா அண்மையில் அமைச்சில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் உப்போடு அயடினைக் கலப்பதற்கான இயந்திர, இரசாயன வகைகளுக்கு யுனிசெப் 60 லட்சம் ரூபா வரையில் செலவு செய்துள்ளது.

ஜூலை முதல் எங்கும் இந்த அயடின் உப்பு கிடைக்கும் எனவும் விலையில் எந்த வித மாற்றமும் இல்லை எனவும் அயடின் கலந்த உப்பின் அவசியத்தைப் பற்றி பாடசாலை மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேர்தல் இடாப்பில் பதிய

# மலையக தமிழ் மக்களுக்கு ஆவணங்கள் அவசியம்

(கொழும்பு)

வாக்காளர் இடாப்பில் தங்கள் பெயர்களை பதிந்து கொள்ளவும் இந்திய வம்சாவளிமக்கள் தங்களிடம் பிரஜா உரிமைச் சான்றுகள் இருந்தால் அதனைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பிரஜா உரிமைச் சான்றிதழ்களை கொண்டிருக்காதவர்கள் வேறு ஒரு ஆதாரங்களை சமர்ப்பிக்க கடமைப்பட்டவர்கள் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

# வாக்குகளைப் பறிப்பதற்கா பிரஜா உரிமைச் சான்றிதழ்?

**- தொழிற் சங்கங்கள் கண்டனம்**

(கொழும்பு)

மக்களின் வாக்குகளைப் பறிப்பதற்காகவா பிரஜா உரிமைச் சான்றிதழ் கேட்கிறார்கள் என்றும், மலையகத்திற்கு மட்டும் வேறு சட்டங்களா என்றும் பல தொழிற் சங்கங்களும் கண்டனம் தெரிவித்து உள்ளன.

மலையக மக்கள் தம்மை வாக்காளராகப் பதிவு செய்வதற்கு பிரஜா உரிமைச் சான்றிதழ் அல்லது வேறு ஆவணம் அவசியம் என்று கேட்கப்படுவது அடிப்படை மனித உரிமையைமீறுவதாகவும் இருப்பதாக தொழிற்சங்கங்கள் வெளியிட்ட கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது அத்துடன் வாக்காளர் பதிவில் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு ஒரு விதியும் மலையக மக்களுக்கு வேறொரு விதியும் கடைப்பிடிக்கப்படுவதாக அவை குற்றம் சாட்டியுள்ளன.

# புகையிரத ஊழியர்கள் குறித்து புகார் செய்யலாம்

வடபகுதி பயணிகளுடன் ரயில்வே ஊழியர்கள் கெடுபிடியாக நடந்துகொண்டால் அதுபற்றி கவனத்திற்கு கொண்டுவரும்படி கோட்டை புகையிரத நிலைய அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரும்படியும் ரயில்வே நிலைய அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்தவாரம் கோட்டைப் புகையிரத நிலையத்திலிருந்து

## 1-வது பிறந்ததினவாழ்த்து

27-06-1992



செல்வி

**P. ஜோய் ஜெயரீற்றா**

மானிப்பாய் றோட், உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட போல், வசந்தா தம்பதிகளின் தவப்புதல்வி செல்வி P ஜோய் ஜெயரீற்றா தனது முதலாவது பிறந்த தினத்தைத் தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா,

## நினைவு கூருகின்றோம் ...

**1992-06-27**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு புலிபாய்ந்தகல் பகுதியில் இருந்த எமது முகாமொன்றின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய -

- **கப்டன் ஜிம்கெலி** [சின்னப்பிள்ளை நடராசா - கிரான், மட்டக்களப்பு.]
- **லெப். மொட்டைக்கஜன்** [அழகுரத்தினம் மணிவண்ணன் - கல்லடித்தெரு, மட்டக்களப்பு]
- **கங்கா** [நாகலிங்கம் கங்காதரன் - குமாரவீதி, கிரான், மட்டக்களப்பு.]
- **லோகேஸ்** [நல்லரத்தினம் லோகேந்திரராஜா - முறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு]
- **ரவி** [பொன்னையா தர்மராஜா - கறுவாக்கேணி, வாழைச்சேனை, மட்டக்களப்பு]
- **சைமன்** [மயில்வாகனம் மாதவன் - கிரான், மட்டக்களப்பு.]
- **சிந்து** [சித்திரவேல் ஜெயராஜா - கொம்மாந்துறை, மட்டக்களப்பு.]
- **சரவணை** [பின்னையான் சவுந்தரராஜன் - கிரான், மட்டக்களப்பு.]
- **குமார்** [வில்லியம் அருள்நாதன் - ஏறாவூர், மட்டக்

(கொழும்புத்துறை)

வடமராட்சி தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் யாழ் அரசினர் வைத்திய சாலை நோயாளர் நலன் புரிச் சங்கத்தின் நூலக சேவைக்காக புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் கடந்த மாதம் 20ம் திகதி புதன் கிழமை நோயாளர் நலன் புரிச்சங்க நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (24)

## சென்.பற்றிக்ஸ் அதிபர் ஓய்வுபெறுகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செ.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிரான்சிஸ்யோசப் வரும் ஜூன் 30 ஆம்திகதி அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெறுகிறார்.

கல்லூரியின் புதிய அதிபராக வண. ஏ.ஐ.பேனாட் வரும் 30 ஆம் திகதி பதவி ஏற்கவுள்ளார்.

## ஆங்கிலப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக முதலாம்ஆண்டு கலைப்பீடமாணவர்களுக்கு ஆங்கிலப் பாடத்தில் மாதிரிப்பரீட்சை சயை அடுத்தமாதம் முதல் வாரத்தில் நடாத்த பல்கலைக்கழக ஆங்கிலபிரிவு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரியவருகிறது.

இம்முறையே முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு ஆங்கில பாடத்தில் புதிய நடைமுறையில் பரீட்சையை நடாத்ததீர்மானித்துள்ளதுஇதுவே முதல்தடவை எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

## தொடர்பு கொள்ளவும்

(தெல்லிப்பழை)

வலிகிழக்கு கூட்டுறவுக் கோட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றிணைந்து நடாத்தும் சர்வதேசகூட்டுறவு தினவிழாவையொட்டி பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, நாடகப் போட்டி, விளையாட்டுப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதில் கலந்து கொள்ள விரும்பும் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க எல்லைக்குட்பட்ட அங்கத்தவர்கள். பணியாளர்கள், பணிப்பாளர்கள், சங்க பாலர் பாடசாலைகள், சங்கமட்டத்திலுள்ள பாடசாலைகள் ஆகியன. தற்போது இடம்பெயர்ந்து மானிப்பாய் நகரசபை மண்டபத்தில் இயங்கும் சங்கப்பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் கேட்டுள்ளார்.



செல்வி

★ P. ஜோய் ஜெயரீற்றா ★

மானிப்பாய் றோட், உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட போல், வசந்தா தம்பதிகளின் தவப்புதல்வி செல்வி P ஜோய் ஜெயரீற்றா தனது முதலாவது பிறந்த தினத்தைத் தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, ஆசையம்மா, ஆச்சி, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர்கள் யாவரும் இறைவன் ஆசியால் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்

[4610]

## பாடசாலை அபிவிருத்திச் சபை
## யாழ். வேம்படி மகளிர் கல்லூரி

கல்வி அமைச்சின் புதிய சுற்று நிருபத்திற்கேற்ப பாடசாலை அபிவிருத்திச் சபையின் ஒரு அங்கமாகிய பெற்றோர்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டி உள்ளதால், எமது பாடசாலையில் தற்போது கற்கும் மாணவிகளின் பெற்றோர்கள் அனைவரையும் 04-07-1992 (சனிக்கிழமை) அன்று காலை 10 00 மணிக்கு கல்லூரியின் மேபின் தம்பையா மண்டபத்தில் தவறாது ஒன்றுகூடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

அதிபர்
வேம்படி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்

(சி/ 4611)

## நன்றி நவிலல்

பொன்னாலையில் 23-06-1992 இல் நடைபெற்ற எதிர்பாராத வெடிவிபத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட

### 2வது லெப். கங்காமுனி
### (யேசுதாசன் பேர்னாட்ஷா)

வீரவேங்கையின் இறுதிக் கிரியையில் கலந்து சகல விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய சக போராளிகள், குருநகர் கடற்புலிகள் அமைப்பினர், யாழ். கிறீன்சிங்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் பெருமனவில் வந்து அஞ்சலி செய்த பொது மக்கள் ஆகியோருக்கும் எனது நன்றிகள்

15/16 மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(2724)

தந்தை
ஆ. யேசுதாசன்

(கொழும்பு)

மக்களின் வாக்குகளைப் பறிப்பதற்காகவா பிரஜா உரிமைச் சான்றிதழ் கேட்கிறார்கள் என்றும், மலையகத்திற்கு மட்டும் வேறு சட்டங்களா என்றும் பல தொழிற் சங்கங்களும் கண்டனம் தெரிவித்து உள்ளன

மலையக மக்கள் தம்மை வாக்காளராகப் பதிவு செய்வதற்கு பிரஜா உரிமைச் சான்றிதழ் அல்லது வேறு ஆவணம் அவசியம் என்று கேட்கப்படுவது அடிப்படை மனித உரிமையை மீறுவதாகவும் இருப்பதாக தொழிற்சங்கங்கள் வெளியிட்ட கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது அத்துடன் வாக்காளர் பதிவில் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு ஒரு விதியும் மலையக மக்களுக்கு வேறொரு விதியும் கடைப்பிடிக்கப்படுவதாக அவை குற்றம் சாட்டியுள்ளன.

## புகையிரத ஊழியர்கள் குறித்து புகார் செய்யலாம்

வடபகுதி பயணிகளுடன் ரயில்வே ஊழியர்கள் கெடுபிடியாக நடந்துகொண்டால் அதுபற்றி கவனத்திற்கு கொண்டுவரும்படி கோட்டை புகையிரத நிலைய அதிபர் கூறியுள்ளார்.

ரயில் பிரயாணிகள் குறிப்பிட்டதொரு எடைக்கு உட்பட்ட பொருள்களை தம்முடன் எடுத்துச் செல்ல அனுமதி உண்டு என்றும், இதற்கு தடையாக இருக்கும் ரயில்வே ஊழியர்கள் குறித்து உடனடியாக ரயில் நிலைய அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரும்படியும் ரயில்வே நிலைய அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்தவாரம் கோட்டைப் புகையிரத நிலையத்திலிருந்து யாழ்தேவி ரயிலில் வடபகுதிக்கு பயணம் செய்ய முனைந்த பிரயாணிகள் பலரை பொதிகளுடன் அனுமதிக்க முடியாது என்று ரயில்நிலைய வாயிலில் கடமையிலிருந்த டிக்கட் பரிசோதகர் தடுத்து வைத்த சம்பவத்தையடுத்து இவ் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## பட்டயக் கணக்காளர் பலர் வெளிநாடுகளில் பணி

[கொழும்பு]

சிறிலங்கா பட்டயக் கணக்காளர் பலர் வெளிநாடுகளில் தொழில் பார்ப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

சிறிலங்கா பட்டயக் கணக்காளர் நிலைய 1991ஆம் ஆண்டறிக்கையின்படி, அதே ஆண்டில் மேற்படி நிலைய உறுப்பினர் மொத்தம் 1,511 பட்டயக் கணக்காளர்களில் 617 பேர் வெளிநாடுகளில் குடியேறியுள்ளார்கள்.

அவுஸ்ரேலியா 120 சிறிலங்கா பட்டயக் கணக்காளர்களுக்குத் தொழில் வழங்கியுள்ளது மற்றும் கனடா (79), சாம்பியா (62), அமெரிக்கா (53), நியுசிலாந்து (43), இங்கிலந்து (38), பாப்புவா - நியுகினி (35), பொஸ்வானா(25), பிஜித்தீவு (18) ஜமய்க்கா (16) ஆகிய நாடுகளிலும் சிறிலங்கா

பட்டயக் கணக்காளர் குடியேறியுள்ளதாக நிலையத்தின் தரவுகள் தெரியப்படுத்துகின்றன மேலும் தென் ஆபிரிக்காவில் ஆறு பட்டயக் கணக்காளர்கள் தொழில் பார்க்கிறார்கள்.


## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00 6.00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகிறது

புதிய வெளியீடு

## EAGLE HAS LANDED

(கழுகு தரையிறங்கி விட்டது)

[4569]


## 1992-06-27

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு புலிபாய்ந்தகல் பகுதியில் இருந்த எமது முகாமொன்றின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய -

**கப்டன் ஜிம்கெலி** [சின்னப்பிள்ளை நடராசா - கிரான், மட்டக்களப்பு.]

**லெப். மொட்டைக்கஜன்** [அழகுரத்தினம் மணிவண்ணன் - கல்லடித்தெரு, மட்டக்களப்பு ]

**கங்கா** [நாகலிங்கம் கங்காதரன் - குமாரவீதி, கிரான், மட்டக்களப்பு.]

**லோகேஸ்** [நல்லரத்தினம் லோகேந்திரராஜா - முறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு ]

**ரவி** [பொன்னையா தர்மராஜா - ஊறுவாக்கேணி, வாழைச்சேனை, மட்டக்களப்பு ]

**சைமன்** [மயில்வாகனம் மாதவன் - கிரான், மட்டக்களப்பு.]

**சிந்து** [சித்திரவேல் ஜெயராஜா - கொம்மாந்துறை மட்டக்களப்பு.]

**சரவணை** [பிள்ளையான் சவுந்தரராஜன் - கிரான், மட்டக்களப்பு.]

**குமார்** [வில்லியம் அருள்நாதன் - ஏறாவூர், மட்டக்களப்பு.]

**றொசான்** [ஐயாத்துரை அமிர்தநாதன் - மயிலியதனை, தொண்டமானாறு ]

1988 ஆம் ஆண்டு மணலாறு நித்திகைக்குளம் பகுதியில் எதிர்பாராத விதமாக எமது மிதிவெடியில் சிக்கியதில் காயமுற்ற நிலையில் சயனைற் உட்கொண்டதில் எம்மைப் பிரிந்த -

**கப்டன் சுபேசன்** [பேரம்பலம் கிருஸ்ணபிள்ளை - புலோலி]

1989 ஆம் ஆண்டு தமிழகம் தஞ்சாவூரில் தமிழக காவல்துறையினர் கைது செய்ய முயன்றபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். போசன்** [பஞ்சலிங்கம் சிவகுமாரன் - கோயிலடி,முகத்துவாரம்,மட்டக்களப்பு]

மணலாறு - நாயாற்றுப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**மதன்** [வேலுப்பிள்ளை இராஜேந்திரன் -செல்வநகர்]

**லெப். யோக்கின்** [செந்தில்வேல் சக்திவேல்- காளிகோயிலடி, வல்வெட்டித்துறை.]

1990 ஆம் ஆண்டு அம்பாறை அறுகம்பை முகாமில் சிறிலங்காப் படையினரால் ரயர் போட்டு எரித்துக் கொல்லப்பட்ட 4 தமிழர்கள். தாண்டியடிப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 5 தமிழ் இளைஞர்கள்.

மட்டக்களப்பு கோப்பா வெளிப் பகுதியில் இராணுவ நடவடிக்கையின்போது படுகொலை செய்யப்பட்ட 2 தமிழர்கள்.

திருக்கோணமலை / உப்புவெளி 3-ம் கட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

மருதங்கேணியில் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

யாழ் - நல்லூர்ப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 5 தமிழர்கள். சுன்னாகத்தில் உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட ஓவியக் கலைஞர்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட பெரிய புல்லுமலையைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(வி/4600)

## சிந்தனைக்கு

பிறரின் அன்பை விரும்பாமல், அச்சத்தை விரும்புபவரின் அதிகாரம் வெறுப்புக்குரியது. அவர்களின் வாழ்க்கை, பரிதாபத்துக்குரியது.

— கொர்னீலியஸ் நிபாஸ்


ஈழநாதம்

81, ஸ்டேசன்வீதி, யாழ்ப்பாணம் 27-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 55


## பேரினவாதிகளுக்கு ஒரு பாடம்

இஸ்ரேலியத் தேர்தலில், ஆளும் வலதுசாரிக்கட்சி தோல்வி கண்டுள்ளது. 120 ஆசனங்களைக் கொண்ட இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் 62 ஆசனங்களைப் பெற்று அறுதிப்பெரும்பான்மையுடன் தொழிற் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. வலதுசாரிக்கூட்டணியிடம் இருந்து 13 வருடங்களின் பின்னர், தொழிற்கட்சி மீண்டும் ஆட்சியை ஏற்றுள்ளது.

தேர்தல் வெற்றியின் பின்னர் செய்தியாளரிடம் பேசிய தொழிற்கட்சித் தலைவர் யிஷாக் ராபின் ''பாலஸ்தீனருக்கு என்று தனியான சுயாட்சி அமைப்பொன்றை அமைக்கும் முயற்சிக்கு தொழிற்கட்சி தலைமையிலான கூட்டணி அரசாங்கம் முன்னுரிமையை கொடுக்கும் என்றார். அதற்கு ஏற்றால் போல் கைப்பற்றப்பட்ட அரபுப்பிரதேசங்களில் அரசியல் நோக்கம் கொண்ட யூதக்குடியிருப்புத்திட்டங்களை அமைப்பதற்கு அரச பணம் பயன்படுத்தப்படுவதை தொழிற்கட்சி தலைமையிலான கூட்டரசாங்கம் தடுக்கும் எனவும் தெரிவித்தார். மேலும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் தொடர்பு வைத்திருப்பதை தடைசெய்யும் சட்டம் மீளாய்வு செய்யப்படும் என்றும் சீர்குலைந்த நிலையிலுள்ள அமெரிக்க- இஸ்ரேலிய ராஜீய உறவை சீராக்குவதில் புதிய அரசு ஈடுபடும் எனவும் தெரிவித்தார்.

சியோனிய சித்தாந்தத்தில் ஊறித் திளைத்த இஸ்ரவேலில் பாலஸ்தீனருக்கு சுயாட்சி அமைப்பு வழங்கப் போவதாக அறிவித்து தேர்தலில் தொழிற்கட்சி வெற்றியீட்டியமையானது இஸ்ரேல் மக்களின் மன மாற்றத்தையே தெளிவாகக் காட்டுகின்றது. அதாவது பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாசீர் அரபாத் தெரிவித்திருப்பது போன்று ''யுத்தத்திற்கும், பயங்கரவாதத்திற்கும் எதிராக இஸ்ரேலிய மக்கள் அளித்த தீர்ப்பு'' என்றே சொல்ல வேண்டும்.

சுமார் 40 வருடங்களுக்கு மேலாக வன்மத்துடன் போரிட்டவர்கள் இன்று பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக வாக்களித்துள்ளார்கள். அதாவது யுத்தத்தின் கொடுமையையும், இழப்புக்களையும் அறிந்த அம்மக்கள் யுத்தம் தொடர்வதினால் நன்மை ஏதும் ஏற்பட்டுவிடப் போவதில்லை, இராணுவத்தைக் கொண்டு தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியாது என்ற நிலையிலேயே தற்பொழுது பாலஸ்தீனியருக்கு சுயாட்சி வழங்கும் திட்டத்திற்கு ஆதரவு அளித்துள்ளார்கள்.

# இந்தியாவின் அடுத்த ஜனாதிபதி யார்?

# நரசிம்மராவ் அரசிற்கு சோதனைக் களம்

ஒருவாறாக இந்தியாவின் ஆளும் காங்கிரஸ்கட்சியானது குடியரசுத்தலைவர் பதவிக்கான தனது வேட்பாளரை அறிவித்துவிட்டது. இது பிரதமர் நரசிம்மராவைப் பொறுத்தவரையில் அவரது தலைமைத்துவத்திற்கான ஒரு சோதனைக்களம் எனலாம்.

ஒரு லட்சம் வாக்காளர் தொகையைக் கொண்ட குடியரசுத் தலைவர் தேர்தல் களத்தில் காங்கிரஸ் கட்சிக்கு இருபத்தாறு ஆயிரம் வாக்குகள் மட்டுமே உண்டு. இந்தத் தேர்தல் களத்தில் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் உள்ள மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களும் இருபத்தைந்து மாநிலங்களினதும் சட்டப் பேரவை உறுப்பினர்களும் வாக்களிக்கத் தகுதியுடையவர்களாவர்.

இதனால் நரசிம்மராவ் தமது கட்சியின் வேட்பாளரைத் தெரிவு செய்யும்போது பாரதீய ஜனதாக் கட்சிக்கும், இடதுசாரிக் கட்சிகளுக்கும் ஏற்புடையவராக அவர் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்க வேண்டி ஏற்பட்டது. இத்தேர்தல் களத்தில் முரண்பாடான தத்துவார்த்தப் போக்குகளைக் கடைப்பிடிக்கும் இவ்விரு கட்சிகளும் கால் பங்கிற்கு அதிகமான வாக்குகளில் செல்வாக்கு செலுத்த வல்லவையாகும்.

இரண்டு பக்கத்தினரிலும் யாராவது ஒரு தரப்பினரை மட்டும் திருப்திப் படுத்தக் கூடிய நிலையில் நரசிம்மராவ் தமது வேட்பாளரைத் தெரிவு செய்திருக்கலாம். ஆனால் நரசிம்மராவின் சிறுபான்மை அரசானது சில சமயங்களில் பாரதீய ஜனதாக் கட்சியினதும், வேறு சில சந்தர்ப்பங்களில் இடதுசாரிகள் மற்றும் தேசிய முன்னணியின் ஆதரவுடனும் தான் நிலைக்க வேண்டியுள்ளது. இதனால் எந்தவொரு குழுவினரிலும் தனித்து தங்கி நிற்பதை தவிர்த்துவிடவே அவர் எப்போதும் விரும்பி வருகிறார்.

கடந்த வாரம் வரையில் தமது வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கு நரசிம்மராவ் அதிகம் சிரமப்பட்டதாக இல்லை. பதவிக்காலம் முடிவடைய இருக்கும் இராமசுவாமி வெங்கட்ராமன் வகித்து வரும் குடியரசுத் தலைவர் பதவிக்கு தற்போதைய குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவை [74] வேட்பாளராக்கும் அதே சமயம் ராஜதந்திரியாகப் பதவி வகித்து காங்கிரஸ்காரராக மாறிய கொங்கிறில் ராமன் நாராயணன் (71) குடியரசுத் தலைவராக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. கேம்பிறிட்ஜ் மற்றும் ஹார்வார்ட் பல கலைகழகங்களில் பயின்றவரான டாக்டர் சர்மா உயர் வகுப்பு பிராமணராக இருக்கும் அதே வேளை லண்டன் பொருளாதாரக் கல்வி நிலையத்தில் பயின்றவரான நாராயணன் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவராவார்.

எனினும் கடந்த வாரத்தில் எதிர்க்கட்சி வட்டாரங்களில் ஏற்பட்ட மாற்றங்களால் சர்மா - நாராயணன் ஜோடி நியமனம் பெறுவார்களா என்பது கேள்விக்கு உள்ளானது. இரண்டு பதவிகளில் ஒன்றை எதிர்க்கட்சியினருக்கு ஒதுக்கத் தவறும் பட்சத்தில் தமது சொந்த வேட்பாளரை நிறுத்தப் போவதாக பாரதீய ஜனதாக் கட்சி மிரட்டியது. சர்மா- நாராயணன் ஜோடியில் இருவருமே காங்கிரஸ்காரர்கள் தான்.

மேலும் ஹரிஜன சமூகத்தைச் சார்ந்த ஒருவர் அடுத்த குடியரசுத் தலைவர் பதவிக்கு தெரிவு செய்யப்படாவிட்டால் தமது பாராளுமன்ற அங்கத்தவர் பதவியை துறக்கப் போவதாக தேசிய முன்னணியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான விஸ்வநாத் பிரதாப் சிங் அறிவித்து விட்டிருந்தார். தேர்தல் களத்தில் ஐந்தில் ஒரு பங்கு வாக்குப் பலத்தைக் கொண்டிருக்கும் ஹரிஜன சமூகத்தைச் சார்ந்த பிரதிநிதிகளும் இக்கோரிக்கைக்கு ஆதரவு காட்டி வருகின்றனர்.

1947ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் பெற்றது முதல் இதுவரை குடியரசுத்தலைவர் பதவிக்கு ஹரிஜன சமூகத்தைச் சார்ந்த எவரும் நியமிக்கப்படவில்லை என்பதுடன் 'தீண்டத்தகாதவர்கள்' என ஒதுக்கப்படும் இம்மக்களில் பெரும்பாலானோர் பலத்த சிரமத்தின் மத்தியிலேயே வாழ்க்கையை ஓட்டுகின்றனர். இந்தியாவின் 880 மில்லியன் சனத்தொகையில் 5:1 என்ற விகிதத்தில் ஹரிஜன மக்கள் வாழ்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நரசிம்மராவ் தென்னிந்திய பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர். ஒரு ஹரிஜனை குடியரசுத் தலைவராக நியமிப்பதை விடவும் டாக்டர் சர்மாவிற்கு அப்பதவியை வழங்குவதில் அவர் பெரும்பாலும் திருப்திப்படக் கூடும். எனினும் சிலர் மகாராஷ்டிராவின் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த எஸ்.பி. சவானைஉள்துறை அமைச்சராக்கியது போலவே ஒருவருக்கு இந்த வாய்ப்பை பிரதமர் வழங்கக் கூடும் என்றே எதிர்பார்த்தனர்.

நாராயணன் 1997இல் குடியரசுத் தலைவராக்கப்படுவார் என்ற உறுதிமொழியை வழங்குவதன் மூலம் தமது இரு வேட்பாளர்களுக்கும் எதிர்க்கட்சியினரின் ஆதரவைப் பெறுவதில் நரசிம்மராவ் ஆர்வமாக உள்ளார்.

குடியரசுத் தலைவர் பதவி என்பது பெரும்பாலும் ஒரு அலங்காரப் பதவியாகவே இருக்கின்ற போதிலும் அரசியல் உறுதிப்பாடுகள் குலைகின்ற சந்தர்ப்பங்களில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகி விடுகிறது. 1989லும் 1991லும் நடைபெற்ற இரு தேர்தல்களின் போதும் எந்தக் கட்சியும் தெளிவான அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளாத நிலையில் வெங்கட்ராமன் குடியரசுத் தலைவர் என்ற வகையில் ஆற்றிய பங்கு கணிசமானது.

குடியரசுத் துணைத் தலைவரின் கடமை என்பது பாராளுமன்றத்தின் மேலவையான ராஜ்யசபாவின் கூட்டத்தை நடத்துவதும். குடியரசுத் தலைவர் இல்லாத சந்தர்ப்பங்களில் அவரது பதில் கடமைகளை ஆற்றுவதும் தான்.

காங்கிரஸ் கட்சிக்கு பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் போதுமான பெரும்பான்மை இல்லாத நிலையில் முக்கியமான இவ் இரு பதவிகளுக்கும் நம்பிக்கைக்கு உரியவர்களை தேர்ந்தெடுப்பதில் நரசிம்மராவ் கவனம் செலுத்துவார் என்பது இயல்பாக எதிர்பார்க்கக் கூடியதே.

ஜூன் 24 தான் குடியரசுத் தலைவர் பதவிக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான இறுதி நாளாகும். தேவையேற்பட்டால் தேர்தல்கள் ஜூலை 13 ஆம் திகதியன்று இடம்பெறும். குடியரசுத் துணைத்தலைவர் பதவி செப்டம்பரில் தான் காலாவதியாகும். ஆனால் அப்பதவியில் ஏற்கனவே இருந்த டாக்டர் சங்கர் தயாள் சர்மா காங்கிரஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு விட்டமையால் அந்த இடமும் அடுத்த மாதத்திலேயே வெளியாகிறது.

எனினும் ஜப்பான் நாட்டிற்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நரசிம்மராவ் திங்களன்று பயணமாகி விட்டார். குடியரசுத் தலைவர் பதவிக்கு டாக்டர் சங்கர் தயாள் சர்மாவை ஆதரிக்கும்படி பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்துள்ள அவர் குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கு எவரையும் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நன்றி: ஐலண்ட்

வெங்கட் நாராயணன்

குறிப்பு: இந்தியாவின் குடியரசுத் தலைவர் பதவிக்கான தேர்தலில் போட்டியிட நாற்பத்திரண்டு வேட்பாளர்கள் சார்பில் எண்பத்தாறு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வேட்பு மனுக்கள் அனைத்தையும் பரிசீலனை செய்த தேர்தல் திணைக்களம் முப்பத்தெட்டு வேட்பாளர்களை நிராகரித்து விட்டது. தற்போது ஆளும் இந்திரா காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்டுள்ள தற்போதைய குடியரசுத் துணைத் தலைவரான டாக்டர் சங்கர் தயாள் சர்மா, எதிர்க்கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்டுள்ள முன்னாள் ராஜதந்திரியான பேராசிரியர் ஜி. ஜி. சுவெல், மற்றும் ராம் ஜெத்மலானி, ஜோகிந்தர் சிங் ஆகியோர் தேர்தல் களத்தில் உள்ளனர். வேட்பு மனுக்களை விலக்கிக் கொள்ளும் கடைசித் தினம் இன்று ஆகும்.

## அமெரிக்க-இந்திய உறவுகளை ராவ் காலத்தில் வலுப்படுத்தலாம்

### - ஜோர்ஜ் புஷ் நம்பிக்கை

(கலிபோர்னியா)

பிரதமர் பி.வி. நரசிம்மராவ் ... றுக்கு பேட்டியளித்த அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ... லாறு இருக்கின்றதென்றும் கருத்து வேறுபாடுகள் இருந் ...

## காவிரி குறித்து விசாரிக்க அனைத்துக் கட்சி கூட்டம்

### - பங்காரப்பா அறிவிப்பு

[பெங்களூர்]

காவிரிநீர்ப் பங்கீடு விவகாரத்தில் கர்நாடக அரசு வகிக்க வேண்டிய பங்கு குறித்து விவாதிப்பதற்காக அனைத் ... டம் பேசிய அவர் மேலும் கூறுகையில், காவிரிநீர் தாவா நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணை செயற்படுத்தப்படுவதைக் கண்காணிக்க குழு ...

தின விடுதலை இயக்கத்துடன் தொடர்பு வைத்திருப்பதை தடைசெய்யும் சட்டம் மீளாய்வு செய்யப்படும் என்றும் சீர் குலைந்த நிலையிலுள்ள அமெரிக்க- இஸ்ரேலிய ராஜீய உறவை சீராக்குவதில் புதிய அரசு ஈடுபடும் எனவும் தெரிவித்தார்.

சியோனிய சித்தாந்தத்தில் ஊறித் திளைத்த இஸ்ரேலில் பாலஸ்தீனருக்கு சுயாட்சி அமைப்பு வழங்கப் போவதாக அறிவித்து தேர்தலில் தொழிற்கட்சி வெற்றியீட்டியமையானது இஸ்ரேல் மக்களின் மன மாற்றத்தையே தெளிவாகக் காட்டுகின்றது அதாவது பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாசீர் அரபாத் தெரிவித்திருப்பது போன்று ''யுத்தத்திற்கும், பயங்கரவாதத்திற்கும் எதிராக இஸ்ரேலிய மக்கள் அளித்த தீர்ப்பு'' என்றே சொல்ல வேண்டும்.

சுமார் 40 வருடங்களுக்கு மேலாக வன்மத்துடன் போரிட்டவர்கள் இன்று பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் எனபதற்காக வாக்களித்துள்ளார்கள். அதாவது யுத்தத்தின் கொடுமையையும், இழப்புக்களையும் அறிந்த அம்மக்கள் யுத்தம் தொடர்வதினால் நன்மை ஏதும் ஏற்பட்டுவிடப் போவதில்லை, இராணுவத்தைக் கொண்டு தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியாது என்ற நிலையிலேயே தற்பொழுது பாலஸ்தீனியருக்கு சுயாட்சி வழங்கும் திட்டத்திற்கு ஆதரவு அளித்துள்ளார்கள்.

இஸ்ரேல் மக்களின் மனதில் ஏற்பட்ட மாற்றத்திற்கு தனியாக உள்நாட்டு நிலவரம் மட்டும் காரணமல்ல. உலகில் குறிப்பாக கிழக்கு ஐரோப்பாவில் இடம்பெற்ற / இடம் பெற்று வருகின்ற தேசிய இன விடுதலைப் போராட்டங்களும் அவற்றின் வெற்றியும், அதற்கு ஆதரவான மேற்கு நாடுகளின் நிலைப்பாடும் இம்மாற்றத்திற்குக் காரணமாகும்.

இதேவேளை, தேர்தலில் வெற்றிபெற்ற தொழிற்கட்சி, சமாதானத்திற்கான முன்முயற்சிகளை உடன் எடுக்கவுள்ளது என்பது அதன் தலைவரின் முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டிலிருந்தே தெரியவருகின்றது. அவர் தனது முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருப்பவை, பிரச்சினையைத் தீர்பதற்கான அடிப்படை அம்சத்தில் கைவைத்துள்ளதையே காட்டுகின்றது. குடியேற்றங்களுக்கு அரசு நிதி வழங்காது என்ற அறிவிப்பு பாலஸ்தீனத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பை தணிக்கும் அதேவேளை, பாலஸ்தீனியருக்கு நம்பிக்கை ஊட்டுவதாகவும் உள்ளது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் தொடர்புகள் வைத்திருப்பதைத் தடைசெய்யும் சட்டத்தை மீளாய்வு செய்யவுள்ளதாகக் குறிப்பிட்டமை பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றால், போராட்டத்தை முன்னெடுப்பவர்களுடன் பேச வேண்டும் என்பதை தெளிவாக உணர்ந்திருப்பதையே காட்டுகின்றது.

இத்தனைக்கும் இஸ்ரேலின் புதிய பிரதமராகப்பதவி ஏற்கப் போகும் தொழிற்கட்சித் தலைவரான யிட்ஷாக் ராபின் ஒரு முன்னாள் இராணுவத்தளபதியாகும். பாலஸ்தீன மண்ணை ஆக்கிரமிப்பதற்கென நடந்த போரில் நேரடியாகப் பங்கு பற்றியவரும் ஆகும். இவ்வாறு இருந்தும் இஸ்ரேல் அமைதியாகவும், சர்வதேசத்துடன் நல்லுறவுடனும் வாழ வேண்டுமானால், பாலஸ்தீனியரின் சுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும். அவர்களின் அடிப்படை உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதில் அவர் அக்கறையாகவுள்ளார்.

இஸ்ரேலில் இன்று மக்கள் மனதிலும், அரசியற் கட்சிகளின் மனதிலும் ஏற்பட்டுள்ள மாற்றமானது சிங்கள மக்களுக்கும், பேரினவாத சக்திகளுக்கும் ஒரு பாடமாகும். உலகில் ஒடுக்கு முறை சக்திகளுக்கு உதாரணமாகக் காட்டப்பட்ட சியோனிஸ்ட்டுக்களே இன்று பாலஸ்தீனியரின் சுயாட்சியை அங்கீகரிக்க முன் வந்துள்ளனர். இது பெருந்தன்மையால் ஏற்பட்டதல்ல இயலாமையினால் ஏற்பட்டதே. இதேபோன்று பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேசியே தீர்வு காணப்பட வேண்டும் என்பதும் கட்டாயத்தின் நிமிர்த்தம் ஏற்பட்டதே. இவற்றை சிங்கள பேரினவாத அரசாங்கமும் புரிந்து கொள்ள வேண்டும் எவ்வளவு சக்தி வாய்ந்த இராணுவமாக இருந்தாலென்ன எவ்வளவு பெரிய அடக்குமுறையை மேற்கொண்டாலென்ன தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமைகள் அங்கீகரிக்கப்படாமல் பிரச்சினைக்கு தீர்வு கண்டு விட முடியாது.

யாராவது ஒரு தரப்பினரை மட்டும் திருப்திப் படுத்தக் கூடிய நிலையில் நரசிம்மராவ் தமது வேட்பாளரைத் தெரிவு செய்திருக்கலாம். ஆனால் நரசிம்மராவின் சிறுபான்மை அரசானது சில சமயங்களில் பாரதீய ஜனதாக் கட்சியினதும், வேறு சில சந்தர்ப்பங்களில் இடதுசாரிகள் மற்றும் தேசிய முன்னணியின் ஆதர...

...இரண்டு பதவிகளில் ஒன்றை எதிர்க்கட்சியினருக்கு ஒதுக்கத் தவறும் பட்சத்தில் தமது சொந்த வேட்பாளரை நிறுத்தப் போவதாக பாரதீய ஜனதாக் கட்சி மிரட்டியது சர்மா-நாராயணன் ஜோடியில் இருவருமே காங்கிரஸ்காரர்கள் தான்.

மேலும் ஹரிஜன சமூகத்தைச் சார்ந்த ஒருவர் அடுத்த...

...படுத்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த எஸ்.பி. சவானைஉள் துறை அமைச்சராக்கியது போலவே தொருவருக்கு இந்த வாய்ப்பை பிரதமர் வழங்கக் கூடும் என்றே எதிர்பார்த்தனர்.

நாராயணன் 1997இல் குடியரசுத் தலைவராக்கப்படுவார் என்ற உறுதிமொழியை வழங்குவதன் மூலம் தமது...

...வாளரை தேர்ந்தெடுப்பதில் நரசிம்மராவ் கவனம் செலுத்துவார் என்பது இயல்பாக எதிர்பார்க்கக் கூடியதே.

ஜூன் 24 தான் குடியரசுத் தலைவர் பதவிக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான இறுதி நாளாகும். தேவையேற்பட்டால் தேர்தல்கள் ஜூலை 13 ஆம் திகதியன்று இடம்பெறும் குடியரசுத் துணைத்தலைவர் பதவி...

...தைய குடியரசுத் துணைத் தலைவரான டாக்டர் சங்கர் தயாள் சர்மா, எதிர்க்கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்டுள்ள முன்னாள் ராஜதந்திரியான பேராசிரியர் ஜி. ஜி. சுவெல், மற்றும் ராம் ஜெத்மலானி, ஜோகிந்தர் சிங் ஆகியோர் தேர்தல் களத்தில் உள்ளனர். வேட்பு மனுக்களை விலக்கிக் கொள்ளும் கடைசித் தினம் இன்று ஆகும்.

# அமெரிக்க-இந்திய உறவுகளை ராவ் காலத்தில் வலுப்படுத்தலாம்

## - ஜோர்ஜ் புஷ் நம்பிக்கை

(கலிபோர்ணியா)

பிரதமர் பி.வி. நரசிம்மராவ் தலைமையில் இந்தியாவுடனான உறவுகளை வலுப்படுத்துவதற்கு உகந்த சூழல் இந்தியாவில் இப்போது நிலவுகிறது என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்.

கலிபோர்ணியாவிலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்த அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்திய - அமெரிக்க உறவுகள் அணு ஆயுத பரவல் தடுப்பு மற்றும் வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகளினால் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்ற போதிலும் மேம்பாடு காணும் என்றும்,

அமெரிக்காவுடன் இந்தியா நட்புறவு கொண்டிருந்த வரலாறு இருக்கின்றதென்றும் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இந்தியாவுடன் கட்டுப்பாடற்ற வர்த்தகம் நடத்தவே அமெரிக்கா விரும்புகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

# டில்லி அபிப்பிராயம் குறித்து நான் கவலைப்படவில்லை

## - செல்வி ஜெயலலிதா

(சென்னை)

டில்லியில் உள்ள பலர் உண்மை பேசுவதை குறிப்பாக காவிரிநீர் பிரச்சினை குறித்து நான் பேசுவதை விரும்பவில்லை என்று தெரிகிறது. என்னைப் பொறுத்த வரை என் விஷயத்தில் மத்திய அரசு திருப்தியாக இருக்கிறதா அல்லது அதிருப்தியாக இருக்கிறதா என்பது பற்றி எனக்கு கவலைஇல்லை.

இவ்வாறு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா புதுடில்லியில் வெளியாகும் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்; காவிரி நீர் பிரச்சினையில் பங்காரப்பா எதைச் செய்ய வேண்டும் என்று நினைத்தாரோ அதைச் செய்து விட்டார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இந்தப் பிரச்சினைக்கு விட்டுக்கொடுப்பது என்ற பிரச்சினைக்கே இடமில்லை என் அரசாங்கத்திற்கு என்ன நடந்தாலும் சரி தமிழ்நாட்டிற்கு சேர வேண்டிய முழுப்பங்கும் கிடைத்தாக வேண்டும்எனத் தெரிவித்தார்.

மேலும் தமிழ்நாடு உட்பட எதிர்க்கட்சி நடக்கும் மாநில அரசுகள் கலைக்கப்பட்டு புதிதாக தேர்தல் நடத்தப்பட வேண்டும். டில்லியில் அதிகார வட்டத்தில் பேசப்படுகிறதே என நிருபர் கேட்ட போது தமிழக காங்கிரஸ் தலைவர்கள் சில இத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும் படிவலியுறுத்தி வருகிறார்கள். ஆனால் இந்த வலியுறுத்தலுக்கு மத்திய அரசு பலியானால் அதனால் ஆதாயத்தை விட நெருக்கடிகள் தான் அதிகரிக்கும் எனத் தெரிவித்தார்.

கட்சிக்காரர்களிடமும் அரச அதிகாரிகளிடமும் சர்வாதிகாரி போல நடந்து கொள்கிறீர்கள் என குற்றஞ் சாட்டப்படுகின்றதே? இது குறித்து உங்கள் கருத்தென்ன எனக் கேட்ட போது;

என்னைப் பொறுத்த வரை சர்வாதிகாரம் என்பது கடைசி வார்த்தைதான் மற்றக் கட்சிகளைப்போலவே எந்த ஒரு பிரச்சினையானாலும் சரி அ.தி.மு.க.விலும் ஜனநாயக ரீதியில் விவாதங்கள் ஆலோசனைகள் நடத்தப்பட்டு முடிவு எடுக்கிறோம்,

சிலர் பொய்யான தகவல்களின் அடிப்படையில என்னை ஏமாற்ற முனைந்தால் நான் அதற்கு உடன்படமாட்டேன். எந்த ஒரு அரசியல்கட்சியிலும் கருத்துக்கள் மாறுபடுவது இயற்கைதான். அதற்கு அர்த்தம் சர்வாதிகார முறையில் பிரச்சினைக்கு நான் தீர்வு காண்கிறேன் என்பதல்ல எனவும் தெரிவித்தார்.

## ஏ. என். சி. யால் நிராகரிப்பு

(ஜோகனஸ்பேர்க்)

உடனடியாக பேச்சுக்கள் நடத்துமாறு தென்ஆபிரிக்கா ஜனாதிபதி டி கிளார்க் விடுத்த வேண்டுகோளை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ஏ.என்.சி.) நிராகரித்து விட்டது.

பிரச்சார நடவடிக்கைகளின்ஒரு உத்தியாகவேதென் ஆபிரிக்க அரசு தம்மை பேச்சுக்கு அழைக்கிறது என்றும் போய்ப்பற்றஸ் அகதிமுகாமில் இடம்பெற்ற படுகொலைகளுக்கு தென் ஆபிரிக்கா அரசும பொறுப்பென்றும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தெரிவித்துள்ளது. அத்துடன் இனப்பாகுபாடற்ற தேர்தல் நடத்துவது குறித்து உறுதியான வாக்குறுதி அளிக்கப்பட வேண்டும் என்றும் அவை தெரிவித்துள்ளது.

இதே நேரம் டி. கிளார்க் காங்கிரசின் பல கோரிக்கைகளை தாம் ஆராயவுள்ளதாகவும்,

போய்பற்றாஸ் அகதிமுகாமில் சென்றவாரம் நடந்த கொலையை விசாரிக்க சர்வதேச பிரமுகர் ஒருவரை அனுப்பத் தாம் விரும்புவதாகவும் இருதரப்பினரிடையேயும் பேச்சுக்கள் முறிந்து போகாமலிருக்க பேச்சுக்கள் நடத்துவது அவசியமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ரமோசுக்கு வாழ்த்து

(வாஷிங்டன்)

பிலிப்பைன்ஸின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ரமோஸை அமெரிக்கா வாழ்த்தியுள்ளது அவருடன் இணைந்து செயல் படத்தாம்உத்தேசித்துள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

# காவிரி குறித்து விசாரிக்க அனைத்துக் கட்சி கூட்டம்

## - பங்காரப்பா அறிவிப்பு

[பெங்களூர்]

காவிரிநீர்ப் பங்கீடு விவகாரத்தில் கர்நாடக அரசு வகிக்க வேண்டிய பங்கு குறித்து விவாதிப்பதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டமொன்று வரும் செவ்வாயன்று கூட்டப்படவிருப்பதாக பெங்களூரில் கர்நாடக முதல்வர் எஸ்.பங்காரப்பா அறிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், காவிரிநீர் தாவா நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணை செயற்படுத்தப் படுவதைக் கண்காணிக்க குழுவொன்றை அமைக்குமாறு மத்திய நீர்வளத்துறை அமைச்சர் வி. சி. சுக்லா தெரிவித்துள்ள யோசனை பற்றியும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## பாஸ்போர்ட் மோசடி

# இலங்கைத் தமிழர் டில்லியில் கைது

(டில்லி)

பாஸ்போர்ட் மோசடிகளில் ஈடுபட்டவர்களென்ற குற்றச்சாட்டின் கீழ் இலங்கையைச் சேர்ந்த கந்தசாமி என்பவரையும், தமிழ வாசியான மற்றுமொருவரையும் புதுடில்லிப் பொலிசார் கைது செய்துள்ளனர். இவர்களுக்கு சர்வதேச ரீதியான தொடர்புகள் இருந்ததாகவும். இவர்களிடமிருந்து சுமார் நூறு போலிப் பாஸ்போர்ட்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரியவருகிறது.

# அரபு லீக், அல்லது ஐ. நா. லிபியரைவிசாரிக்க அனுமதி

(திரிப்போலி)

லொக்கர் பீ - பான் - எம் விமானக் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டதாகச் சொல்லப்படும் இரண்டு லிபிய நாட்டவர்களும் அரபு லீக் அல்லது ஐக்கிய நாடுகள் சபையினால் விசாரிக்கப்படலாம் என்று லிபியப் பாராளுமன்றம் தீர்மானித்துள்ளது பாராளுமன்ற நடவடிக்கைகளின் ஒளிபரப்பின் போது இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் இருவரையும் விசாரிக்க வேண்டுமென அமெரிக்காவும், பிரிட்டனும் கோரிவருவது தெரிந்ததே.

# செர்பியர்களுக்கு எதிராக புதிய தடைகள் அறிவிப்பு

(வாஷிங்டன்)

வாஷிங்டனில் உள்ள செர்பியதூதுவரை அங்கீகரிக்கமறுப்பது உட்பட செர்பியாவிற்கு எதிராக பல புதிய தடைகளை விதிக்கவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் தெரிவித்துள்ளார்.

சிக்காகோவிலுள்ள யூகோஸ்லாவிய கவுன்சலா அலுவலகத்தை மூடிவிடுமாறும் ஜோர்ஜ்புஷ் உத்தரவிட்டுள்ளார் ஐ நா., உலக வங்கி உட்பட சர்வதேச ஸ்தாபனங்களில் செர்பியா பங்கேற்பதை நிறுத்தி வைப்பதற்கான முயற்சிகள் தீவிரப் படுத்தப்படும் என்றும் ஜோர்ஜ் புஜ் தெரிவித்துள்ளார்.

செர்பியாவின் நடவடிக்கைகள் குறித்து அதிருப்தி தெரிவித்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ்பேகர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்தத் தடை உத்தரவினை புஜ் விடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

ஈழநாதம்

# தமிழ்ச் சமுதாயத்திற்கு ஈடுசெய்யமுடியாத இழப்பு

## பேராசிரியர் மறைவுக்கு இரங்கல்

மறைந்த பேராசிரியர் நவரட்ணம் சரவணபவானந்தன் அவர்களுடைய அகாலமரணச் செய்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்களாகிய எங்களுக்கு மட்டுமல்ல தமிழ் சமுதாயத்திற்கே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இன்றைய காலகட்டத்தில் உருவாகும் கல்விமான்கள், புத்திஜீவிகள், நிபுணர்கள் நமது பிரதேசத்தை தவிட்டு அந்நிய நாடுகளுக்கு சுகபோகங்களை அனுபவிப்பதற்காக செல்கிறார்கள், ஆனால் பேராசிரியர் சரவணபவானந்தன் தனது மைந்தனை (1991 ஆகஸ்ட்) இழந்த நிலையிலும் யாழ்ப்பாண சமுதாயத்திற்காகவும், யாழ். மருத்துவ பீடத்திற்காகவும் அயராது உழைத்தவர்.

இவ்வாறு மறைந்த பேராசிரியர் சரவணபவானந்தன் நினைவையொட்டி நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மருத்துவப் பீடாதிபதி பேராசிரியர் பால சுப்பிரமணியம் அஞ்சலி உரை நிகழ்த்துகையில் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் பெரியதொரு மருத்துவபீடம் கட்டவேண்டும், அதனை உலகளாவிய ரீதியல் நடைமுறைக்கு கொண்டுவரவேண்டும் எனப் பாடுபட்டவர். 1980ஆம் ஆண்டளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி பின் 1982 ஆம் ஆண்டு சட்ட மருத்துவத்துறை பேராசிரியர் ஆனார்.

பேராசிரியர் சரவணபவானந்தன் இலங்கையில் மட்டுமல்ல உலகத்திலேயே தலைசிறந்த சட்டமருத்துவநிபுணர் ஐக்கிய அமெரிக்காவில் சட்ட மருத்துவம் தொடர்பாக நிகழ்த்திய ஆய்வில் சிறப்புப் பதக்கபெற்றவர் என்ற பெருமையை தேடியவர் என்றார்.

மேலும் தொடர்ந்து பேசுகையில் 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் ஆக்கிரமித்த வேளை யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஆறுமாதகாலமாக இயங்காமல் மூடவேண்டிய நிலைக்குள்ளானது. இந்நிலையில் பேராசிரியர் சரவணபவானந்தனின் முயற்சியினால் தொடர்ந்து மருத்துவப் பீடத்தினை இயக்க வழிவகுத்தவர் என்றார்.

பெருந்திரளான மாணவர்கள், கல்விமான்கள், விரிவுரையாளர் முன்னிலையில் நடைபெற்ற அஞ்சலி வைபவத்தில் பல்கலைக்கழக துணைவேந்தர் அ. துரைராஜா தலைமையுரை நிகழ்த்துகையில்,

சட்டமருத்துவத்துறையிலே நிபுணத்துவம் பெற்ற இவர் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் வெளியிட்டுள்ளார். இலங்கையில் நடைபெற்ற சிறப்பு நீதிமன்ற வழக்குகளிலேயே இவருடைய நிபுணத்துவ ஆலோசனைகள் பெறப்பட்டன. சில வேளைகளில் வேண்டுமென்றே மறைக்கப்படவிருந்த பல தரவுகளையும், சான்றுகளையும் நீதிக்காக அஞ்சாமல் வெளிக்கொணர்ந்த பெருமை இவருக்கு உரியது என்றார்.

மேலும் தொடர்ந்து பேசுகையில் 1961 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவமானிப் பட்டத்தினையும், லண்டன் பல்கலைக்கழகத்தில் *D M.J* பட்டத்தினையும், *1970* இல் *M R.C.P* பட்டத்தினையும், *1983* இல் *F. R. C P.* பட்டத்தினையும் பெற்றார் என்றார்.

விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் மகேஸ்வரன், கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் கணேசலிங்கம், மாணவர்கள் சார்பில் ரட்ணம்நிர்மலன், திரு. முருகையன், மாணவர் சங்க தலைவர் சந்திரசேகரன் திரு. ரட்ணசபாபதி ஆகியோரும் இரங்கலுரை நிகழ்த்தினர்.

## நாளை இறுதிக்கிரியை

மறைந்த நவாலியூர் பேராசிரியர் நவரட்ணம் சரவணபவானந்தனின் இறுதிக் கிரியை நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறுமென துணைவேந்தர் அ. துரைராஜா அறிவித்துள்ளார்.

இவரது நினைவையொட்டி

## முறைசாரா துறைகளுக்கு சமூக காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)

முறைசாரா உற்பத்தித் துறையில் ஈடுபட்டவர்களுக்கான சமூக காப்புறுதி திட்டம் ஒன்றை உருவாக்குவதற்காக சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட குழுஒன்றை அமைச்சரவை நியமித்துள்ளது.

புனரமைப்பு, புனர்வாழ்வு சமூகநலத்துறை அமைச்சர் பி. தயாரத்னா இதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

முறைசார்ந்த துறைகளான விவசாயிகள், மீனவர்களின் ஓய்வூதியத்திட்டம் போன்ற வற்றில் அடிப்படையிலும்இப் மல் போதல், அல்லது [illegible] உட்பட இது போன்ற நலன்களை உள்ளடக்கியதாகும்.

தொழில் நிபுணர்கள், மேசன்மார் தச்சுத்தொழில் செய்வோர், ஓட்டுவேலை செய்வோர் மட்பாண்டத் தொழில் செய்வோர் நூல் நூற்போர், கைப்பணியாளர் மின்சாரத் தொழிலாளர் ஆகியோர் இத்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட உள்ளனர்.

## சர்வோதய பண மோசடி;

## இரத்ததானம்

[யாழ்ப்பாணம்]

யாழ் தொழில் நுட்பக் கல்லூரி மாணவிகள் 15பேர் யாழ் போதனா வைத்தியசாலைக்கு நேற்று இரத்ததானம் செய்துள்ளனர்.

இவர்களில் மேலும் 35பேர் வேறு ஓர்நாளில்இரத்ததானம் செய்யுமாறு யாழ் போதான வைத்தியசாலை இரத்த வங்கி அதிகாரிகளினால் அனுப்பி வைக்கப்பட்டனர் இதற்குக் காரணம் மேலதிகமான இரத்தத்தை மின்சாரமின்றி பாதுகாக்க முடியாது என்பதே என தெரிய வருகின்றது.[பா]

## புதிய உத்தியோகத்தர்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் 92 93 ஆம் ஆண்டிற்கான புதிய உத்தியோகத்தர் பொறுப்பேற்றல் கடந்த 14-ம் திகதி மேற்படி கழகத்தில் நடைபெற்றது.

இருபத்தாறு உறுப்பினர்களைக் கொண்ட இக்கிளையின் தலைவராக லயன்ஸ் வ. பரமசிவம் அவர்களும், செயலாளராக லயன்ஸ் க. இராசலிங்கம் அவர்களும், பொருளாளராக லயன்ஸ் கே. துரைராசாவும் பொறுப்பேற்றுள்ளனர்.

## தமிழ்த்தினவிழா

யாழ். சென்ஜோசப்ஸ் வித்தியாலய தமிழ்த்தினவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை [30-06-92] முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்குப் பிரதம விருந்தினராக சி. வேலாயுதம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்) அவர்களும், சிறப்பு விருந்தினராக ஆர். எஸ் நடராஜா அருட்திரு என் எம். சவரிமுத்து அடிகளார், ஆர். அருளானந்தம் ஆகியோரும் கௌரவவிருந்தினராகச் செம்பியன்செல்வன், சிட்டு (யாழ். மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர்) ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## சைக்கிள் ஓட்டப் போட்டி

யாழ் பல்கலைக்கழகத்தில் இன்று காலை 6 00 மணிக்கு மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி இடம்பெறும் என பல்கலைக்கழக விளையாட்டுத்துறை தலைவர் அறிவித்துள்ளார். மேலும் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை 10 மைல் மரதன் ஓட்டப் போட்டியும் இடம்பெறும் என தெரிவித்தார். (05)

# அமெரிக்க இராணுவம் பொஸ்னியா செல்லும்?

அமெரிக்கா பொஸ்னியாவிற்கு இராணுவத்தை அனுப்ப ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறது என உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால் அமெரிக்காஅதனை மறுத்துள்ளது. அமெரிக்கா உலக பொலிஸ்காரன் அல்ல. அதேசமயம் பொஸ்னியாவில் ஏற்பட்டுள்ள கலவரங்களை அடுத்து மனிதாபிமான ரீதியான உதவிகளை வழங்க அமெரிக்க இராணுவம் பயன்படுத்தப்படலாம் எனவும் அமெரிக்கா தெரிவித்தது அப்படி அனுப்பப்பட்டாலும் அது ஐ நா. சபையின் சார்பில் தான் அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது விடயத்தில் அமெரிக்க ஜனாதிபதி புஷ் மேற்கு நாடுகளுடன் கூட்டணி அமைத்து ஐ. நா ஆதரவுடன் செயற்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகள் சமீபத்தில மேற்கத்திய பொருளாதார கூட்டு என்ற அமைப்பை உருவாக்கியுள்ளன இந்த அமைப்பு தேவைப்பட்டால் இராணுவத் தலையீட்டை செய்யும் திட்டத்தைக் கொண்டது.

இந்த அமைப்பின் இராணுவத் தளபதிகள் லண்டனில் கூடி தமது கடற்படையைப் பயன்படுத்தி ஐக்கிய நாடுகள் சபை செர்பியா, மால்டினோ [illegible]விய மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையை செயற்படுத்தலாமா என ஆலோசித்து வருகின்றனர். அல்லது அமெரிக்கா எடுக்கும் இராணுவ நடவடிக்கைக்கு உதவியாக செயல்படலாமா எனவும் ஆலோசித்து வருகின்றனர்.

## குறிப்பிட்ட கால எல்லையில் அணு ஆயுதம் அனைத்தும் அழிக்கப்படல் வேண்டும்

(டோக்கியோ)

ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் அணுவாயுதங்கள் அனைத்தையும் அழிக்கும் வகையில் அணுவாயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தம் திருத்தப்பட வேண்டும் என்று இந்தியா கோரியிருக்கிறது.

டோக்கியோவில் நேற்றுச் செய்தியளர் கூட்டத்தில் பேசிய இந்தியப் பிரதமர் பி. வி நரசிம்மராவ் தற்போதுள்ள ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதல்ல; அதை மறுபரிசீலனை செய்வதே உடனடித் தேவை என்று கூறினார்.

## இந்திய குடியரசு தலைவர் தேர்தலில் 42 பேர் போட்டி

(டில்லி)

இந்திய குடியரசுத் தலைவர் தேர்தலில் நாற்பத்தி இரண்டு வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இந்த நாற்பத்தி இரண்டு வேட்பாளர்கள் சார்பிலும் மொத்தம் எண்பத்தாறு வேட்பு மனுக்கள் நேற்று வரை தாக்கலாகியுள்ளன ஆளும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா, தேசிய முன்னணி. ஜனதாதளம் பாரதிய ஜனதா ஆகியவற்றின் சார்பில பேராசிரியர் சுவெல் ஆகியோர் முக்கி வேட்பாளர்கள் என்பது தெரிந்ததே.

## ஆசியாவில் அமைதி நிலவ இந்தியஜப்பான்ஒத்துழைப்பு

(டோக்கியோ)

ஆசியா முழுவதிலும் அமைதியையும் நலச்செழிப்பையும் தோற்றுவிப்பதில் இந்தியாவும் ஜப்பானும் ஒத்துழைக்க முடியும் என்று இந்தியப் பிரதமர் பி.வி நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

ஐந்துநாள் விஜயமொன்றை மேற்கொண்டு ஜப்பான் சென்ற இந்தியப் பிரதமர் தாயகம் திரும்பும் வழியில் செய்தியாளர்கள் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

ஆசியாவில் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் நிலையாக நீடித்து பராமரிப்பதில் இந்தியா முக்கியமான ஒரு பெரிய அப்சமாய் விளங்கிட முடியும் என்றும்,

பரஸ்பரம் ஒருவருக்கொருவர் நல்லுறவுகளை வளர்க்க ஜப்பானிய முதலீட்டாளர்கள் முன் வரவேண்டும் என்றும் இவ்வாறான முயற்சியில் ஈடுபட்டால், இப்பிராந்திய அரசியல், பொருளாதாரத்தின் தோற்றமே மாறிவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

## பஞ்சாப்பில் துப்பாக்கிச்சூடு ஒன்பதுபேர் பலி

(சண்டிகார்)

பஞ்சாப் மாநிலத்தில் லூதியான மாவட்டத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மக்கள் சந்தடி மிகுந்த சந்தைப் பகுதிக்குள் கூடியிருந்த மக்களை நோக்கி ஐந்து பேர் சுட்டனர் என்றும் இதனால் இவர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

சீக்கிய தீவிரவாதிகளே துப்பாக்கிச் சூட்டினை நடத்தினர் என்று லூதியான மாவட்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## யாழ். இந்துக் கல்லூரியில் 'வரவு' வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியத்தால் ''வரவு'' மலர் நிகழ்த்தினார். பிரதம விருந்தினர் உரையை விரிவுரையாளர் ப சிவநாதன் அவர்களும், வெளியீட்டு உரையை கல்லூரி

## வீரச்சாவு

வத்துடன் ஏற்பட்ட மோதலில் விழுப்புண் அடைந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் 25-6-92 வீரச்சாவை தழுவிக்கொண்டார். வீரச்சாவை தழுவிக்கொண்ட வீரவேங்கை புகழரசன் (மதன் பொன்னையா சுதர்சன் கோப்பாய் வடக்கு, கோப்பாய்) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணத்தில் பெரியதொரு மருத்துவபீடம் கட்ட வேண்டும், அதனை உலகளாவிய ரீதியில் நடைமுறைக்கு கொண்டுவரவேண்டும் எனப் பாடுபட்டவர். 1980ஆம் ஆண்டளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி பின் 1982 ஆம் ஆண்டு சட்ட மருத்துவத்துறை பேராசிரியர் ஆனார்.

சட்டமருத்துவத்துறையிலே நிபுணத்துவம் பெற்ற இவர் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல ஆய்வுக் கட்டுரை

சங்க தலைவர் சந்திரசேகரன் திரு. ரட்ணசபாபதி ஆகியோரும் இரங்கலுரை நிகழ்த்தினர்.

முதுநிலை ... வானந்தம் ஆகியோரும் கௌரவவிருந்தினராகச் செம்பியன்செல்வன், சிட்டு (யாழ். மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர்) ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஐந்துநாள் விஜயமொன்றை மேற்கொண்டு ஜப்பான் சென்ற இந்தியப் பிரதமர் தாயகம் திரும்பும் வழியில் செய்தியாளர்கள் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

ஆசியாவில் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் நிலையாக நீடித்து பராமரிப்பதில் இந்தியா முக்கியமான ஒரு பெரிய அப்சமாய் விளங்கிட முடியும் என்றும்,

பரஸ்பரம் ஒருவருக்கொருவர் நல்லுறவுகளை வளர்க்க ஜப்பானிய முதலீட்டாளர்கள் முன் வரவேண்டும் என்றும்

## ஒன்பதுபேர் பலி

(சண்டிகார்)

பஞ்சாப் மாநிலத்தில் லூதியான மாவட்டத்தில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மக்கள் சந்தடி மிகுந்த சந்தைப் பகுதிக்குள் கழுமியிருந்த மக்களை நோக்கி ஐந்து பேர் சுட்டனர் என்றும் இதனால் இவர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

சீக்கிய தீவிரவாதிகளே துப்பாக்கிச் சூட்டினை நடத்தினர் என்று லூதியான மாவட்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## முறைசாரா துறைகளுக்கு சமூக காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)

முறைசாராத உற்பத்தித் துறையில் ஈடுபட்டவர்களுக்கான சமூக காப்புறுதி திட்டம் ஒன்றை உருவாக்குவதற்காக சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றை அமைச்சரவை நியமித்துள்ளது.

புனரமைப்பு, புனர்வாழ்வு சமூகநலத்துறை அமைச்சர் பி. தயாரத்னா இதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

முறைசார்ந்த துறைகளான விவசாயிகள், மீனவர்களின் ஓய்வூதியத்திட்டம் போன்றவற்றில் அடிப்படையிலும் இப்புதியதிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த உத்தேச திட்டம் உடல்நல காப்புறுதி, இயலாமல் போதல், அல்லது [illegible] உட்பட இது போன்ற நலன்களை உள்ளடக்கியதாகும்.

தொழில் நிபுணர்கள், மேசன்மார் தச்சுத்தொழில் செய்வோர், ஓட்டுவேலை செய்வோர் மட்பாண்டத் தொழில் செய்வோர் நூல் நூற்போர், கைப்பணியாளர் மின்சாரத் தொழிலாளர் ஆகியோர் இத்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட உள்ளனர்.

## சைக்கிள் ஓட்டப் போட்டி

யாழ் பல்கலைக்கழகத்தில் இன்று காலை 6 00 மணிக்கு மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி இடம்பெறும் என பல்கலைக்கழக விளையாட்டுத்துறை தலைவர் அறிவித்துள்ளார். மேலும் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை 10 மைல் மரதன் ஓட்டப் போட்டியும் இடம்பெறும் என தெரிவித்தார். (05)

## நாளை இறுதிக்கிரியை

மறைந்த நவாலியூர் பேராசிரியர் நவரட்ணம் சரவணபவானந்தனின் இறுதிக் கிரியை நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறுமென துணைவேந்தர் அ. துரைராஜா அறிவித்துள்ளார்.

இவரது நினைவையொட்டி இன்றும், நாளையும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் பிரார்த்தனையும், அஞ்சலிநிகழ்ச்சிகளும் காலை 8 30 மணிக்கு இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (5)

## சர்வோதய பண மோசடி; தமிழ் ஊழியர்கள் கைது

வவுனியா சர்வோதயகிளைக்குரிய பணத்தை மோசடி செய்தமை சம்பந்தமாக தமிழ் ஊழியர்கள் சிலரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா கிளைக்குரிய சுமார் ஐந்து இலட்சம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டமை தெரிந்ததே.

மோசடி சம்பந்தமாக இக் காரியாலயத்தில் பணிபுரிந்த ஊழியர்கள் சிலரை பொலிஸார் தேடி வந்தனர். தமிழ் ஊழியர்களில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது (தி)

## மின்சார வேலி

காட்டு யானைகளிடமிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக எழுபத்தைந்து கிலோ மீற்றர் தொலைவுக்கு மின்சார வேலி அமைக்கப்பட இருப்பதாக தெரியவருகிறது.

மகாவலி வலயத்தின் சிபிரிவு உள்ளடங்கிய கிராந்துருகோட்டே, தெய்யத்த கந்திய பகுதிகளில் காட்டு யானைகளின் அச்சுறுத்தலிலிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக இந்த மின்சார வேலி அமைக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். இந்துக் கல்லூரியில் 'வரவு' வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியத்தால் ''வரவு'' மலர் நேற்றுக் காலை குமாரசுவாமி மண்டபத்தில் வெளியிடப்பட்டது. வணிக மாணவர்கள், ஆசிரியர்கள், ஏனைய பாடசாலை மாணவர் பிரதிநிதிகள் ஆகியோர் இவ் விழாவில் கலந்து கொண்டனர்

செல்வன் க. சுதன் தலைமையில் நடைபெற்ற இவ் வெளியீட்டு விழாவில் ஆசியுரையை விரிவுரையாளர் மா. சின்னத்தம்பி அவர்கள் நிகழ்த்தினார். பிரதம விருந்தினர் உரையை விரிவுரையாளர் ப. சிவநாதன் அவர்களும், வெளியீட்டு உரையை கல்லூரி அதிபர் அ. பஞ்சலிங்கம் அவர்களும் நிகழ்த்தினர்.

வரவு மலரின் முதற் பிரதியை விரிவுரையாளர் பா. பாலச்சந்திரன் அவர்கள் பெற்றுக்கொண்டார்யாழ். தொழில்நுட்பக்கல்லூரிவிரிவுரையாளர் டபிள்யூ. ஜெ. குலசேரட்ணம் அவர்கள் ஆய்வுரையை நிகழ்த்தினார்

ஒன்றிய பொறுப்பாசிரியர் பொ. வில்வராஜா அவர்களின் நிறைவுரையுடன் விழாநிறைவு பெற்றது

## நவீல்ட் பாடசாலை வெள்ளிவிழா

(யாழ்ப்பாணம்)

கைதடி நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் வெள்ளிவிழா இன்று சனிக்கிழமை காலை 10 00 மணி தொடக்கம் 5 மணி வரை நவீல்ட் பாடசாலையில் நடைபெறும்.

இவ் விழாவில் கலந்து கொள்ளுமாறு அங்கத்தவர்கள், பாடசாலை மாணவர், ஆசிரியர், பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர். [பா]

## போலி

மைத்து வருவதாகச்சொல்லப்படுகிறது.

1976-ம் ஆண்டுக்குப்பின்னர் முதல்தடவையாக கனடாவின் புதிய குடியேற்ற விதிகள் கனடாப்பாராளுமன்றத்தில் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வீரச்சாவு

வத்துடன் ஏற்பட்ட மோதலில் விழுப்புண் அடைந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் 25-6-92 வீரச்சாவை தழுவிக்கொண்டார். வீரச்சாவை தழுவிக்கொண்ட வீரவேங்கை புகழரசன் (மதன் பொன்னையா சுதர்சன் கோப்பாய் வடக்கு, கோப்பாய்) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கருத்தரங்கு

திரு இ ஜெயராஜ். திரு. க சொக்கலிங்கம், திரு சோ. பத்மநாதன் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள். தொடர்ந்து நடைபெற இருக்கும் கருத்தரங்குகளுக்கான திகதிகள் பின்னர் வெளியிடப்படும்

## சுதந்திர

றைக் சந்தித்து கொழும்பிலுள்ள தமிழ்க் கட்சிகளே பேச்சுவார்த்தை நடத்தி உள்ளன. அண்மையில் கம்யூனிஸ்ட் கட்சியினரோடு பேச்சுவார்த்தை நடத்திய ஏழு தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளும் நேற்று மேற்படி இரு கட்சிகளோடும் கலந்துரையாடினர். பிரேமதாசாவிடம் கையளிக்கப்பட்ட நான்கு அம்சத்திட்டம் பற்றி இப் பேச்சுக்களின் போது விளக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.


# எமது அஞ்சலி



பேராசிரியர்

## நவரட்ணம் - சரவணபவானந்தன்

MBBS (Cey) MRCP (UK) FRCP (EDIN) DMJ (LOND)

(18-04-1935 - 23-06-1992)

யாழ்ப்பாண மருத்துவபீடத்தின் சட்ட மருத்துவ துறைத் தலைவர் பேராசிரியர் ந. சரவணபவானந்தன் அவர்களின் திடீர் மறைவு எம்மைப் பெரும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. இது எமக்கு ஈடு இணையற்ற இழப்பாகும்

அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மருத்துவ பீட ஆசிரியர்,
ஊழியர், மாணவர்.

(சி/4604)



யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கம்

## வருடாந்த பொதுச்சபைக் கூட்டம்

மேற்படி பொதுச்சபைக் கூட்டம் 28 06. 92 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு சங்க மண்டபத்தில் தலைவர் திரு.சு சிவபாலன் அவர்கள் தலைமையில் நடைபெறும். பொதுச்சபை உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ளும்படி அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

செயலாளர்.
திருநெல்வேலி கிழக்கு

(சி/4612)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

26. 06. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 4585

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

28-364, 26-5873, 24-6439, 27-935, 24-1983, 41-1462, 42 759, 26-4443, 26-5113, 27-2854, 24-4747, 27-2143, 25-4164, 25-954, 36-7639, 36-6463, 37-4457, 36-5013, 71-6276.

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்,

42 9212, 24-576, 24-6475, 26-2737 42-3329, 24-415, 24-5734, 25-546 25 3302, 36-8889, 71-7321, 70-8005 70 8938, 36-2937, 37-7484, 36-0362, 22-6511, 36-1121, 25-7591 25-5682, 25-580, 36-7100, 36-4610, 36-4144, 70-2378 CC-125


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது